VI—GOVERNMENT MOTION.

AMENDMENT TO SCHEDULE IV TO THE MADRAS DISTRICT MUNICIPALITIES ACT, 1920 (MADRAS ACT V OF 1920).

மாண்புமிகு திரு எம். முத்துசாமி : தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட பிரேரணையை நான் முன்மொழிகிறேன்:—

1920-ம் ஆண்டு சென்னை மாவட்ட நகராட்சி மன்றங்கள் சட்டம், (1920-ஆம் ஆண்டு சென்னை சட்டம் V) 305 வது பிரிவின் I-ஆம் துணை பிரிவின்கீழ் தமிழ் நாடு ஆளுநர் அவர்களால் திட்டமிடப்பட்டுள்ள மேற் கூறிய பகுதியின் சட்டம் IVஅட்டவணை, 8-வது விதி (1-A) துணை விதியின் (a) பகுதியின் திருத்த வரைவு ஏற்பளிக்கப்பட வேண்டும்.

வரைவு.

1920-ஆம் ஆண்டு சென்னை மாவட்ட நகராட்சிகள் சட்டம் (1920-ஆம் ஆண்டு சென்னைச் சட்டம் V) 305-வது பிரிவின் (1) துணைப் பிரிவில் வழங் கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, மேற்கூறிய சட்டத்தின் IV-வது அட்டவணையிலுள்ள விதிகளில், தமிழ்நாடு ஆளுநர் இதனால் கீழ்க்கண்ட திருத்தத்தைச் செய்கிறார்.

திருத்தம்.

"மேற்கூறிய விதிகளில் 8-வது விதி (1-A) துணை விதியின் (a) பகுதியில் "ஆறு அரை ஆண்டுகள்" என்ற சொற்களை நீக்கி, "ஏழு அரை ஆண்டுகள்" என்ற சொற்களைச் சேர்த்துக்கொள்ள வேண்டும்."

தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1920-ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சி கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1920) 4-வது விவர அட்டவணையைச் சேர்ந்த 8-வது விதியின் (1) துணை விதியின்கீழ் மேற்கண்ட விதிகளின்படி சொத்து வரி விதிப்பு குறித்த புத்தகங்கள் நிர்வாக அதிகாரிகளினால் ஐந்தாண்டுக்கொரு முறை முழுவதும் திருத்தி அமைக்கப்பட வேண்டும். மேற்படி சட்டத்தில் 4-வது விவர அட்டவணையைச் சேர்ந்த 8-வது விதியின் (1-A) துணை விதியின் (a) பகுதியின்படி, அரசாங்கங்கள் தகுந்த காரணத் திற்காக அவ்வப்போது ஆணை பிறப்பிப்பதன் மூலம் வரி விதிப்பு புத்தகங் களைப் பொதுவாக திருத்தியமைக்கும் பணியை ஒத்தி வைக்கலாம் அல்லது வரி விதிப்பு புத்தகங்களை பொதுவாகத் திருத்தியமைக்கும் பணி குறித்த நடவடிக்கைகளை நிறுத்தி வைக்கலாம். இவ்வாறு ஒத்தி வைப்பது அல் லது நிறுத்தி வைப்பது ஒரு சமயத்தில் ஓர் அரையாண்டிற்கு அல்லது அதற்கு மேற்பட்ட அரையாண்டுகளுக்கு செய்யப்படலாம். ஆனால், எந்த நேர்விலும் ஆறு அரையாண்டுக் கால அளவுக்கு மேல் இவ்வாறு ஒத்தி வைப்பது அல்லது நிறுத்தி வைப்பதனால் வரி விதிப்புப் புத்தகங்களை பின்னர் பொதுவாகத் திருத்தியமைப்பது பாதிக்கப்படக் கூடாது.

1-4-1966 முதற்கொண்டு செய்யப்பட்ட ஐந்தாண்டுச் சொத்து விதிப்பு மாற்றம் மிகவும் அதிகமானது என்றும், தன்னிச்சையாகச் செய்யப்பட்டது என்றும் இந்த வரி விதிப்பு மாற்றம் செயலுக்குக் கொண்டுவரப்படுவது ஒத்தி வைக்கப்பட வேண்டுமென்றும் நகராட்சிகள் பலவற்றிலுள்ள வரி செலுத்துவோரிடமிருந்தும், சில நகராட்சி மன்றங்களிடமிருந்தும் பல முறை யீடுகள் அரசாங்கத்திற்குக் கிடைத்துள்ளன. எனவே, 31-3-1969 வரை பல்வேறு நகராட்சிகளில் வரி விதிப்புப் புத்தகங்களைப் பொதுவாகத் திருத்தி யமைக்கும் பணி ஒத்தி வைக்கப்பட வேண்டுமென்றும், அது குறித்த நட வடிக்கைகள் நிறுத்தி வைக்கப்பட வேண்டுமென்றும், அரசாங்கம் ஆணையிட்டுள்ளது.

25th March 1969] [திரு. எம். முத்துசாமி]

மேற்கண்ட நகராட்சிகளில் வரி விதிப்புப் புத்தகங்களைத்திருத்தியமைக்கும் வேலை மீண்டும் துவக்கப்பட்டு முடியாத நிலையிலுள்ளது. திருத்தியமைக்கும் பணி ஒழுங்காகவும், புகாருக்கு இடமில்லாத வகையிலும் நடைபெற வரி திருத்த அதிகாரிகளுக்கு மேலும் அவகாசமளிக்கவேண்டும். ஆகவே, மேற்கண்ட நகராட்சிகளில் வரி திருத்தத்தை மேலும் ஒரு அரையாண்டுக்கு ஒத்தி வைப்பது அவசியாமாயுள்ளது. தற்போதைய விதிகளின்படி, வரி விதிப்புப் புத்தகங்களைப் பொதுவாகத் திருத்தியமைக்கும் பணியை அல்லது வரி விதிப்புப் புத்தகங்களை திருத்தியமைப்பதற்கான பணி குறித்த நடவடிக்கைகளை ஒரு சமயத்தில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட அரையாண்டு காலத்திற்கு—ஆனால், ஆறு அரையாண்டுகளுக்கு மேற்படாத கால அளவிற்குத்தான் ஒத்திவைக்க அல்லது நிறுத்தி வைக்க அரசாங்கத்திற்கு அதிகாரம் உண்டு. மேற்கண்ட நகராட்சிகளில் வரி விதிப்பு நடவடிக்கைகள் தற்போதைய விதிகளின்படி அனுமதிக்கப்பட்டுள்ள ஆறு அரையாண்டுகளுக்கு எற்கனவே அரசு நிறுத்தி வைத்துள்ளதால் எழு அரையாண்டு கால அளவுக்கு வரி விதிப்புப் புத்தகங்களைப் பொதுவாகத் திருத்தியமைக்கும் பணியை ஒத்திவைக்க அல்லது வரி விதிப்புப் புத்தகங்களைப் பொதுவாகத் திருத்தியமைப்பது குறித்த நடவடிக்கைகளை நிறுத்தி வைக்க அரசாங்கத்திற்கு அதிகாரம் தரும் வகையில் இவ் விதியைத் திருத்தக் கருதப்படுகிறது.

மேற்படி சட்டத்தின் 305-A பிரிவின்கீழ், இவ்விதியைத் திருத்துவதற்கான வரைவு ஒன்று இந்த மாநில கீழ் சட்டமன்றத்தினால் நிறைவேற்றப்பட்டுள்ளது. ஆகவே, இந்தத் திருத்தத்திற்கு மேலவை ஒப்புதல் வழங்குமாறு இந்த மன்றத்தைக் கேட்டுக்கொள்கிறேன்.

MR. CHAIRMAN : The question is—

"That the following draft of an amendment to clause (*a*) of sub-rule (1-A) of rule 8 of Schedule IV to the Madras District Municipalities Act, 1920 (Madras Act V of 1920) proposed to be made by the Governor of Tamil Nadu under sub-section (1) of section 305 of the said Act be approved.

Draft.

In exercise of the powers conferred by sub-section (1) of section 305 of the Madras District Municipalities Act, 1920 (Madras Act V of 1920), the Governor of Tamil Nadu hereby makes the following amendment to the rules in Schedule IV to the said Act :—

Amendment.

In the said rules in clause (*a*) of sub-rule (1-A) of rule 8, for the words " six half years " the words " seven half years " shall be substituted. 4–41 p.m.

The motion was put and carried.

MR. CHAIRMAN : The House will now adjourn and meet again at 3 p.m. to-morrow.

The House then adjourned.